

வீடூர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வீடூர் அரசு பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மதிய உணவினை வழங்கி ஆறுதல் கூறினார். மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் ம. ஜெயச்சந்திரன், விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் ப.சேகர், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.மாசிலாமணி, சேது நாதன்கிணறு,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. கே.பி.ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் கபிலன், ஒன்றியச் செயலாளர்கள் செழியன், ராஜாராமன், இளம்வழுதி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை ரயில் வழிப்பாதையை விரைந்து முடித்திடுமாறும், அதனைத் தொடர்ந்து முகையூர் வரை (தியாகதுருகம், ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் வழியாக) புதிய வழித்தடம் அமைத்து தருமாறும், இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் உரையாற்றியதையடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் நேற்று முன்தினம் (17.12.2024) ஒன்றியத்தின் ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்,இதற்கு ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசனின் கோரிக்கையை உடனடியாக செய்து தருவதாக உறுதியளித்தார்.

### எழுத்தாளர் இமையம் எழுதிய

# “கலைஞரின் படைப்புலகம்” நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, டிச.19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் (17.12.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம் அவர்கள் எழுதிய “கலைஞரின் படைப்புலகம்” நூலினை வெளி யிட்டார்.

நூற்றாண்டு காணும் ஆளுமைகள் எனும் தலைப்பின்கீழ் புகழ்பெற்ற அரசியல் ஆளுமைகள் மற்றும் எழுத்தாளர்கள் குறித்து சிறப்பு நூல்களை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 2022ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் எழுத்தாளர் இமையம் அவர்களால் “கலைஞரின் படைப்புலகம்” என்ற இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது.

இந்நூலானது, கலைஞர் எழுதிய நாவல்கள், சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், பயண நூல், திரைக்கதை வசனங்கள், திரையிசை பாடல்கள், நெஞ்சுக்கு நீதி, உரைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் தொகுப்பாகும். இந்நூலில் இந்திய அளவில் புகழ்பெற்ற 19 எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூலில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் எந்தெந்த ஆண்டு எழுதப்பட்டது என்ற விவரமும் காலவரிசைப்படி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர்

நா. முருகானந்தம் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ. மதுமதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியி யல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர்

பொ.சங்கர், இணை இயக்குநர் முனைவர் தே. சங்கர சரவணன், எழுத்தாளர் இமையம், ஆலோசகர் தி. அப்பன்னசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, டிச. 19-

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சு. முத்துசாமி அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு கழக நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இன்று (19.12.2024) மற்றும் 20.12.2024 (வியாழன், வெள்ளி) வருகை தரவுள்ளார்கள். அந்நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட அட்டவணை படி நடைபெறவுள்ளது.

எனவே, இந்நிகழ்ச்சியில் ஈரோடு வடக்கு,



தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக்கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வ.எண். நேரம் நிகழ்ச்சி இடம்**

1. 19.12.2024 மதியம் 12.00 மணி, கோவையிலிருந்து கார் மூலம் ஈரோடு காளிங்கராயன் இல்லம் வந்தடைதல், காளிங்கராயன் இல்லம், ஈரோடு,
2. 19.12.2024- மாலை 5.00 மணி, கழக நிகழ்ச்சி, தங்கம் மஹால் மேட்டுக்கடை, ஈரோடு,
3. 19.12.2024- மாலை 6.00 மணி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி, முத்துமஹால் பெருந்துறை ரோடு, ஈரோடு,
4. 19.12.2024 - இரவு 7.00 மணி காளிங்கராயன் இல்லம் வந்தடைதல் , காளிங்கராயன் இல்லம், ஈரோடு,
5. 20.12.2024 - காலை 10.00 மணி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, சோலார், புதிய பேருந்து நிலையம்
6. 20.12.2024 - மதியம் 12.00 மணி, கார் மூலம் கோவை சென்றடைதல்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் தி.மு.க. மேற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் அரசடிப்பட்டி 4ரோடு முக்கத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையிலும், திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.டி. தங்கமணி வரவேற்புரையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, அருண், கோகுல், த.சந்திரசேகரன், மாவட்ட துணைச்செயலாளர் ஞான.இளங்கோவன், அரு. வடிவேல், கவுன்சிலர் உஷா செல்வம், கே.சி.சிவக்குமார், ராசி.முருகானந்தம், சரவணன், ஆர்.வி. செல்வம், பாத்திமா பீவி, கருணாகரன், ரெத்தினவேல், குமரேசன், ஆ.பழனிகுமார், அயூப் கான், கே.வி.எஸ். மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, இரண்டு நாள் சுற்றுப்பயணமாக கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்குச் செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**19/12/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10:00 மணி | பேராசிரியர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மரியாதை செய்தல். | இரயில் நிலையம் எதிரில், திருப்பூர். |
| காலை 10:15 மணி | திருப்பூர் தெற்கு தொகுதி கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சூர்யா நகர், ஏ.பி.டி. சாலை, கருவம்பாளையம், திருப்பூர். |
| காலை 10:30 மணி | திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம். | ஆட்சியர் அலுவலகம், திருப்பூர். |
| மதியம் 01:00 மணி | திருப்பூர் வடக்கு மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | பாப்பீஸ் ஹோட்டல், திருப்பூர். |
| மாலை 06:00 மணி | கழகக் கொள்கை பரப்புக்குழு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா. | முத்து மஹால் திருமண மண்டபம், ஈரோடு-பெருந்துறை சாலை, வேப்பம்பாளையம், ஈரோடு. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 16-12-2024



# அறந்தாங்கி ஒன்றியத்தில் ஊராட்சி கிராமச் செயலக கட்டிடம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, டிச.19-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சிலட்டூர் ஊராட்சி கிராமச் செயலக கட்டிடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் (13.12.2024) அன்று திறந்து வைத்து, புதிதாகக் கட்டப் படவுள்ள அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டுமானப் பணியினை அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற பொதுமக்களின் வாழ்வினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ஊரகப் பகுதிகளுக்கு தேவையான அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப் பட்டு வருகிறது. அதன்படி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சிலட்டூர் ஊராட்சி கிராமச் செயலக கட்டிடத்தினை திறந்து வைத்து, புதிதாகக் கட்டப்படவுள்ள அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.39.95 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சிலட்டூர் ஊராட்சி கிராமச் செயலக கட்டிடத்தினை திறந்து வைத்து, ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டுமானப் பணியினை அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா.ஆனந்த், அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சி. நளினி, ஆர்.எஸ்.குமாரவேலன், சிலட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் ராணி ராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம் அரசூரில் பெஞ்சல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட 13 ஊராட்சி கிராம மக்களுக்கு மாவட்ட தொழில் முனைவோர் மையம் மற்றும் தாட்கோ இணைந்து மானியத்துடன் கூடிய சிறப்பு கடன் வழங்கும் விண்ணப்ப பதிவு மற்றும் விழிப்புணர்வு முகாமை தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர்,வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார், இதில் ஒன்றிய கழக செயலாளர்,மாவட்ட கவுன்சிலர் மா.சந்திரசேகரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஓம் சிவ சக்திவேல் மற்றும் அரசு அதிகாரிகள்,துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட கிராம மக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் சிறப்பு நிகழ்ச்சியாக மன்னார்குடி தொகுதி நீடாமங்கலம் தெற்கு ஒன்றியம் வடுவூர் உள் விளையாட்டு அரங்கில் மாவட்ட விளையாட்டு , மேம்பாட்டு அணி, நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய கழகத்துடன் இணைந்து ,கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம் தலைமையில் நடத்திய கபாடி போட்டியில் வெற்றிபெற்ற அணியினருக்கு விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை அமைப்பாளர் செல்வி நிவேதா ஜெசிக்கா, மாநில இளைஞரணி துணை செயலாளர் நா.இளையராஜா, ஒன்றிய கழக செயலாளர் நா.கவியரசு, நகர் மன்ற தலைவர் தா. சோழ ராஜன் ஆகியோர் முன்னிலையில் பரிசுகளை வழங்கினர். நிகழ்வில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ராஜா சீனிவாசன், விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் எம்.என்.ராஜா, துணை அமைப்பாளர்கள் பி.ஜி.ஆர். ராஜாராமன், வீ.ஆர்.என். பன்னீர்செல்வம், பி.எழில் பத்மபிரசாத் , விமல் ராஜ் , இளவரசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அரவிந்த், தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி பி.ஆர்.இளையராஜா, இந்திரஜித், ஒன்றிய அமைப் பாளர்கள் சீ.கோ.செல்வகுமார் , விக்டர் மற்றும் துணை அமைப்பாளர்கள் விஜயராகவன், செந்தமிழ்ச்செல்வன்,இலக்கிய செல்வன் ,விக்ரமாதித்யன், வீரராஜ், நீலமேகம் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.